# <u>சாதாரணக்கூட்டம்</u>

**விளம்பி வருடம் வைகாசி மாதம் 21ஆம் தேதி 2019ம் வருடம் ஜூன் மாதம் 04ம் தேதி (04.06.2019) செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அம்பாசமுத்திரம் நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.ஜெ.பிரேம்ஆனந்த்,B.Sc.,**
தனி அலுவலர்/ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி

**பொருள் எண்: 1**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் 01.10.2003 முதல் குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகைகள் உயர்த்தப்பட்டு அதே கட்டணங்கள் தற்போது வரை நடைமுறையில் வசூல் செய்யப்பட்டு வரப்படுவதை கருத்திற்கொண்டும், அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் பிரிவு பொது பராமரிப்பு செலவினம், மின் கட்டணம் மற்றும் குடிநீர் விநியோக பிரிவு பணியாளர்களின் ஊதியம் ஆகியவற்றினை கருத்திற்கொண்டும், குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகளை உயர்த்தி வசூல் செய்யும் பொருட்டு தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோக துணை விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, குடிநீர் வழங்கல் துணை விதிகளில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.28516/2018/குவ.3, நாள்.07.01.2019ன்படி பொது அங்கீகாரம் பெறப்பட்டது.

தொடர் நடவடிக்கையாக அவை திருநெல்வேலி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதால், இறுதி அங்கீகாரம் பெறுவதற்காக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 461 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:2**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய நீரேற்று நிலையங்களில் முன்அனுமதி வழங்கப்பட்ட கீழ்க்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப் புள்ளி பெறப்பட்ட நாள் | விலைப் புள்ளிதாரர் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | R.செல்வின் துரை, கருவந்தா | அசரியா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கருவந்தா | மகபூப் பாஷா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், விக்கிரமசிங்க புரம் |
| 1 | கோடாரங்குளம் இயல்பு நீரேற்று நிலையத்தில் | 25.01.2019 | 38500 | 39600 | 40100 |

**<u>பொருள் எண்:2</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய நீரேற்று நிலையங்களில் முன்அனுமதி வழங்கப்பட்ட கீழ்க்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப் புள்ளி பெறப்பட்ட நாள் | விலைப் புள்ளிதாரர் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | R.செல்வின் துரை, கருவந்தா | அசரியா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கருவந்தா | மகபூப் பாஷா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், விக்கிரமசிங்க புரம் |
| 1 | கோடாரங்குளம் இயல்பு நீரேற்று நிலையத்தில் 20HP நீர் மூழ்கி மோட்டார் காயில் சுற்றி பழுது நீக்கம் செய்தல். | 25.01.2019 | 38500 | 39600 | 40100 |
| 2 | ஊர்க்காடு சுடலை கோவில் நீரேற்று நிலையத்தில் வேலாயுநகர் OHT க்குரிய உறை கிணற்றிலுள்ள 25HP நீர்முழ்கி மோட்டாருக்கு காயில் சுற்றி பழுது நீக்கம் செய்தல். | 05.03.2019 | 38900 | 39300 | 40300 |

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மேற்காணும் பணிகளுக்கு பட்டியல் படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள R.செல்வின் துரை, கருவந்தா என்பவரது விலைப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம். செலனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்:3</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் **2019–20**ன் கீழ் பணிகள் செய்வதற்கான பணிக்கு ஒப்பந்தபுள்ளி அழைப்பு மாநில அளவில் தினசரி நாளிதளில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மக்கள் தொடர்புத்துறை சென்னை அவர்களின் வெளியீடு ஆணைஎண்-1768 ஒப்பந்தபுள்ளி விளம்பரம்/**2019.** நாள்–**30.05.2019**ன் உத்திரவின்படி பிசினஸ் ஸ்டாண்டர் மற்றும் மக்கள்குரல் ஆகிய நாளிதளில் விளம்பரம் வெளியிடுவதற்கு Accord Advertising Agencyக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. அதற்கான விளம்பர பில் Accord Advertising Agency AAA/0017/19-20 நாள்– **04.06.2019** ன் மூலம் கோரப்பட்டுள்ளது. எனவே அதற்கான

பட்டியல் தொகை ரூபாய் **35,381** /—ஐ Accord Advertising Agency நிறுவனத்திற்கு வழங்கவும், மற்றும் அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்: 4**

அம்பாசமுத்திரம் நகராட்சி முகம்மதியர் தெருவில் உள்ள அங்கன்வாடி மற்றும் சங்கரன்கோவில் ரோட்டில் உள்ள அங்கன்வாடி ஆகிய இரண்டிற்கும் குடிநீர் வசதி செய்து தரக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண் அ3/109/18 நாள் 04.02.2018 அன்று வரப்பெற்று மேற்கண்ட பணிக்கு தலா ஒரு அங்கன்வாடிக்குரூ.10000/– வீதம் மொத்தம் ரூ.20000/– ஒதுக்கீடு செய்தும் உத்திரவிட்டுள்ளார். மேற்கண்ட பணி ஒப்படைப்பு பணியாக ஒப்பந்ததாரர் திரு.ரு.மணி என்பவருக்கு ஒப்படைப்பு செய்தும் அதற்கான பட்டியல் ரூ.20000/– வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 5**

அம்பாசமுத்திரம் நகராட்சி இந்நகர் பகுதிகளில் உள்ள பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை 2019–20ம் நிதியாண்டிற்கு பராமரிப்பு செய்யவும் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு மதிப்பீடு ரூபாய் 4.30/. இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத்திற்கும், மேற்கண்ட பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 6**

அம்பாசமுத்திரம் நகராட்சி இந்நகர் பகுதிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் சின்டெக்ஸ் தொட்டிகள் பணி மேற்கொள்ள 2019–20ம் நிதியாண்டிற்கு பராமரிப்பு செய்யவும் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு மதிப்பீடு ரூபாய் 3.00/. இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத்திற்கும், மேற்கண்ட பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்:7**

அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதிகளில் உள்ள அடிபம்புகள் பழுது மற்றும் பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள 2019–20ம் நிதியாண்டிற்கு பராமரிப்பு செய்யவும் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு மதிப்பீடு ரூபாய் 2.20/. இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத்திற்கும், மேற்கண்ட பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 8**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் 21 வார்டு பகுதி மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க குடிநீர் விநியோகத்தின் போது குளோரின் கலந்த குடிநீர் வழங்கிட ஏதுவாக இராமர்கோவில், சுடலைகோவில் மற்றும் சுப்ரமணியபுரம் பொத்தை தரமட்ட நீர்த்தேக்க தொட்டியில் அமைந்துள்ள குளோரினசன் பிளான்ட்களுக்கு 2019–20ம் நிதியாண்டிற்கு கேஸ்குளோரின் சிலிண்டர் மற்றும் திரவ குளோரின் சப்ளை செய்யும் பணி செய்ய மதிப்பீடு ரூபாய் 6.00/. இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத்திற்கும், மேற்கண்ட பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 9**

தேசிய பசுமை தீர்ப்பாயம் (National Green Tribunal) தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி, அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதிகளில் உள்ள கழிவுநீர் வடிகால்கள் மூலம் தாமிரபரணி நதியின் துணைக்கால்வாயான நதியுண்ணி கால்வாயில் கழிவு நீர் கலப்பதை ஏழு இடங்களில் கழிவுநீர் மாதிரிகள் சேகரித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருநெல்வேலி சோதனை கூடத்தில் ஆய்வுகள் செய்திட ஆய்வு கட்டணம் ரூ.14,000/– செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

ஆய்வு கட்டணம் ரூ.14,000/–ஐ Chief Analyst, Tirunelveli அவர்களுக்கு செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்:10</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய நீரேற்று நிலையங்களில் கீழ்க்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப் புள்ளி பெறப்பட்ட நாள் | விலைப் புள்ளிதாரர் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | R.செல்வின் துரை, கருவந்தா | அசரியா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கருவந்தா | மகபூப் பாஷா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், விக்கிரமசிங்க புரம் |
| 1 | கோடாரங்குளம் தூய நீரேற்று நிலையத்தில் 30HP மோட்டார் எண் 2க்கு புதிய பேரிங் பொருத்தி பழுது நீக்கம் செய்தல். | **31.05.2019** | 12400 | **12900** | **13400** |
| 2 | ஊர்க்காடு சுடலை கோவில் நீரேற்று நிலையத்தில் உள்ள துர்க்கையம்மன் கோவில் OHT க்குரிய உறை கிணற்றிலுள்ள 25HP நீர்முழ்கி மோட்டாருக்கு காயில் சுற்றி பழுது நீக்கம் செய்தல் | **31.05.2019** | 43400 | **44300** | **45200** |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்காணும் பணிகளுக்கு பட்டியல் படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள R.செல்வின் துரை, கருவந்தா என்பவரது விலைப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம். செலனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்:11</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் திரு.எஸ்.முருகன் என்பவர் தனது இருக்கைக்கு காற்றோட்ட வசதிக்காக Pedestal Fan வாங்கிய வகைக்கு அம்பாசமுத்திரம், ஸ்ரீ ஆண்டாள் ஸ்டோர் நிறுவனத்தின் பில்படி தொகை ரூ.3200/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

வருவாய் நிதியில் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:12**

அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்களின் அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் விநியோகம் தொடர்பான புகார்களை கட்டணமில்லா தொலைபேசி (Toll free) வாயிலாக தெரிவித்திட நகராட்சி அலுவலகத்தில் அதற்கான தொலைபேசி வசதி ஏற்படுத்திட ரூ.13,540/– Accounts Officer(Cash), BSNL, Tirunelveli க்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

தற்போதைய வறட்சி காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் அடிப்படை தேவைகளுக்காக நகராட்சி அலுவலகத்தை தொடர்பு கொள்ள கட்டணமில்லா தொலைபேசி இணைப்பு அமைத்திட மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்:13**

அம்பாசமுத்திரம் நகராட்சி மழை மற்றும் பேரிடர் காலங்களில் சாலைகள் மற்றும் தெரு ஓரங்களில் உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகள் முறிந்து விழுந்தால் அதனை உடனுக்குடன் அப்புறப்படுத்திட நகராட்சிக்கு power saw வாங்கி வைத்துக் கொள்ளும்படி திருநெல்வேலி நகராட்சியிகளின் மண்டல இயக்குனர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். அதன் பேரில் 30.05.2019 அன்று வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| Sl. No | Description of work | திரு.பி.மாடசாமி ஒப்பந்தகாரார் பாளையாங் கோட்டை | திரு.எ.ஜெயபிரகாஷ் ஒப்பந்தகாரார் வி.கே.புரம் | SM கன்ஸ்ட்ரக்சன் சிவந்திபுரம் |
|---|---|---|---|---|
| 1 | Supply of power saw with the Following specifications model OR- GS 5800/6900<br>Engine Type: Single cylinder<br>Air cooling oil 1<br>Fuel 01:60<br>Rated power : 2.3kw/8000rpm<br>Engine weight : 5.20kg | 9900 | 10800 | 10500 |

**அலுவலக குறிப்பு:**

குறைந்த விலைப்புள்ளி ரூ.9900/– கொடுத்துள்ள பாளையாங் கோட்டை திரு.பி.மாடசாமி என்பவரது விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண் :14**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் 21 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளில் சுமார் 1270 எண்ணம் 40Wகுழல் விளக்கு மின்கம்பங்கள் உள்ளன மேற்கண்ட மின்விளக்குகளை 2019–20ம் நிதியாண்டிற்கு பராமரிப்பு செய்யவும் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும் தேவையான மின் உதிரிபாகங்கள் வாங்குவதற்கு மதிப்பீடு ரூபாய் 4.70/. இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளது . எனவே மேற்கண்ட செலவினத்திற்கும் , மேற்கண்ட பணி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

வருவாய் நிதியில் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்:15**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் 2019–20 ம் வருடத்திற்கு பொதுசுகாதாரம் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நீர்த்த சுன்னாம்பு. கிறுமி நாசினி மருந்துகள் மற்றும் பொதுசுகாதார தளவாட சாமன்கள் சப்ளை செய்ய மதிப்பீடு ரூபாய் 5.00/. இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளது . எனவே மேற்கண்ட செலவினத்திற்கும் , மேற்கண்ட பணி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

வருவாய் நிதியில் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்

**(ஒப்பம்) J.பிரேம்ஆனந்த்,**
**தனிஅலுவலர்/ஆணையாளர்**
அம்பாசமுத்திரம் நகராட்சி

//உண்மை நகல்//

**ஆணையாளர்(பொ)**
அம்பாசமுத்திரம் நகராட்சி